# பெரியாழ்வார் திருமொழி 5-3
## துக்கச் சுழலையை
(திருமாலிருஞ்சோலை எம்பெருமானைப் போகவொட்டேன்
என்று தடுத்தல்)

453 * துக்கச் சுழலையைச் சூழ்ந்து கிடந்த * வலையை
அறப்பறித்து *
புக்கினில் புக்குன்னைக் கண்டு கொண்டேன் * இனிப் போக
விடுவதுண்டே **
மக்கள் அறுவரைக் கல்லிடை மோத * இழந்தவள் தன்
வயிற்றில் *
சிக்கென வந்து பிறந்து நின்றாய் * திருமாலிருஞ்சோலை
எந்தாய் (1)

454 வளைத்து வைத்தேன் இனிப் போகலொட்டேன் * உந்தன்
இந்திர ஞாலங்களால் *
ஒளித்திடில் நின் திருவாணை கண்டாய் * நீ ஒருவர்க்கும்
மெய்யன் அல்லை **
அளித்தெங்கும் நாடும் நகரமும் * தம்முடைத் தீவினை
தீர்க்கலுற்று *
தெளித்து வலஞ்செய்யும் தீர்த்தமுடைத் * திருமாலிருஞ்சோலை
எந்தாய் (2)

455 * உனக்குப் பணி செய்திருக்கும் தவமுடையேன் * இனிப் போய்
ஒருவன்
தனக்குப் பணிந்து * கடைத்தலை நிற்கை * நின் சாயை
அழிவு கண்டாய் **
புனத்தினை கிள்ளிப் புதுவவி காட்டி * உன் பொன்னடி வாழ்க
என்று *
இனக்குறவர் புதியதுண்ணும் * எழில் மாலிருஞ்சோலை எந்தாய் (3)

456 காதம் பலவும் திரிந்துழன்றேற்கு * அங்கோர் நிழலில்லை
நீரில்லை * உன்
பாத நிழலல்லால் மற்றோர் உயிர்ப்பிடம் * நான் எங்கும்
காண்கின்றிலேன் **
தூது சென்றாய் குரு பாண்டவர்க்காய் * அங்கோர் பொய்சுற்றம்
பேசிச் சென்று *
பேதஞ் செய்து எங்கும் பிணம் படுத்தாய் * திருமாலிருஞ்சோலை
எந்தாய் (4)

457 காலுமெழா கண்ணனீரும் நில்லா * உடல் சோர்ந்து நடுங்கி *
குரல்
மேலுமெழா மயிர்க் கூச்சுமறா * என தோள்களும்
வீழ்வொழியா **
மாலுகளா நிற்கும் என் மனனே * உன்னை வாழத்
தலைப்பெய்திட்டேன் *
சேலுகளா நிற்கும் நீள்சுனை சூழ் * திருமாலிருஞ்சோலை
எந்தாய் (5)

458 எருத்துக் கொடி உடையானும் * பிரமனும் இந்திரனும் * மற்றும்
ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு * மருந்தறிவாரும்
இல்லை **
மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா * மறு பிறவி தவிரத்
திருத்தி * உன் கோயிற் கடைப் புகப்பெய் *
திருமாலிருஞ்சோலை எந்தாய் (6)

459 அக்கரை என்னுமனத்தக் கடலுள் அழுந்தி * உன் பேரருளால் *
இக்கரை ஏறி இளைத்திருந்தேனை * அஞ்சலென்று
கைகவியாய் **
சக்கரமும் தடக்கைகளும் * கண்களும் பீதக ஆடையொடும் *
செக்கர் நிறத்துச் சிவப்புடையாய் * திருமாலிருஞ்சோலை
எந்தாய் (7)

460 எத்தனை காலமும் எத்தனை ஊழியும் * இன்றொடு
நாளையென்றே *
இத்தனை காலமும் போய்க் கிறிப்பட்டேன் * இனி உன்னைப்
போகலொட்டேன் **
மைத்துனன்மார்களை வாழ்வித்து * மாற்றலர் நூற்றுவரைக்
கெடுத்தாய் *
சித்தம் நின்பாலதறிதியன்றே * திருமாலிருஞ்சோலை
எந்தாய் (8)

461 அன்று வயிற்றில் கிடந்திருந்தே * அடிமை செய்யல்
உற்றிருப்பன் *
இன்று வந்து இங்கு உன்னைக் கண்டு கொண்டேன் * இனிப்
போக விடுவதுண்டே **
சென்றங்கு வாணனை ஆயிரம் தோளும் * திருச்சக்கரம்
அதனால்
தென்றித் * திசை திசை வீழச் செற்றாய் *

திருமாலிருஞ்சோலை எந்தாய் (9)

462 * சென்றுலகம் குடைந்தாடும் சுனைத் * திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்ற பிரான் * அடிமேல் அடிமைத் திறம் * நேர்பட விண்ணப்பம் செய் **
பொன் திகழ் மாடம் பொலிந்து தோன்றும் * புதுவைக்கோன் விட்டுசித்தன் *
ஒன்றினோடொன்பதும் பாட வல்லார் * உலகமளந்தான் தமரே (10)